Visit QB365-SLMS - https://www.qb365.in/slms/ Complete Questions and Answers

Questions:

Multiple Choice Question

1.பின்வருவனவற்றுள் எது ஆக்சைடு வகை தாது அல்ல.
(a) குப்ரைட் (b) சைடரைட் (c) காசிட்டரைட் (d) ஜிங்கைட்

2.பின்வருவனவற்றுள் எது சல்பேட் வகை தாது ஆகும்?
(a) கலீனா (b) ஜிங்க் பிளன்ட் (c) செருசைட் (d) ஆங்லசைட்

3.எவ்வுலோக தாதுவினை அடர்ப்பிக்க அம்மோனியா வேதிக் கழுவுதல் பயன்படுகிறது?
(a) சில்வர் (b) காப்பர் (c) அலுமினியம் (d) துத்தநாகம்

4.வாலை வடித்தல் முறை மூலம் தூய்மைப்படுத்தும் உலோகம் _____
(a) டின் (b) காரீயம் (c) துத்தநாகம் (d) பிஸ்மத்

5.நீரேற்ற அலுமினாவை நீரற்ற அலுமினாவாக மாற்றும் முறை _____
(a) வறுத்தல் (b) உருக்குதல் (c) சுயஒடுக்கம் (d) காற்றில்லா சூழலில் வறுத்தல்

6.கார்பனுடன் சேர்ந்து _____ உருவாக்காத உலோகங்களுக்கு கார்பன் ஒடுக்கும் காரணியாக பயன்படுத்தப்படுகிறது.
(a) கார்பன் மோனாக்சைடு (b) கார்பன் டை ஆக்சைடு (c) உலோக கார்பைடு (d) இவற்றுள் எதுவுமில்லை

7.பாக்ஸைட்டின் இயைபு _____
(a) Al_2O_3 (b) $Al_2O_3.nH_2O$ (c) $Fe_2O_3.2H_2O$ (d) இவை எதுவுமல்ல

8.பைரோலுசைட் தாது இம்முறையில் அடர்த்தியாக்கப்படுகிறது.
(a) புவி ஈர்ப்பு முறை (b) நுரை மிதப்பு முறை (c) காந்த பிரிப்பு முறை (d) (அ) மற்றும் (இ) இரண்டும்

9.நுரை மிதப்பு முறையில் பயன்படுத்தப்படும் சேகரிப்பான் _____.
(a) சோடியம் ஈத்தைல் சாந்தேட் (b) சோடியம் ஆர்ஜென்டோ சயனைடு (c) சோடியம் சயனைடு (d) சோடியம் ஹைட்ராக்ஸைடு

10.வேதிக்கழித்தல் இதன் அடிப்படையில் அமைந்துள்ளது
(a) கரைதிறன் (b) கொதிநிலை (c) உருகுநிலை (d) அடர்த்தி

11.அமில வேதிக்கழித்தலின் போது, கரையாத சல்பைடு கரையும் இதுவாக மாற்றப்படுகிறது.
(a) சல்பர் டையாக்ஸைடு (b) சல்பர் ட்ரையாக்ஸைடு (c) சல்பேட் (d) சல்பைட்

12.ஒரு கசடின் வேதி இயைபு _____
(a) SiO_2 (b) FeS (c) $FeSiO_3$ (d) Al_2O_3

13.சின்னபாரிலிருந்து மெர்குரியை இவ்வாறு பெறலாம்.
(a) ஹைட்ரஜன் ஒடுக்கம் (b) கார்பன் ஒடுக்கம் (c) சுய ஒடுக்கம் (d) உலோக ஒடுக்கம்

14.எல்லிங்கம் வரைபடம், இதனை தேர்வு செய்ய நமக்கு பயன்படுகிறது
(a) பொருத்தமான ஒடுக்கி (b) தகுந்த வெப்பநிலை (c) (அ) மற்றும் (ஆ) இரண்டும் (d) ஆக்ஸிஜனேற்றி

15.Ag_2O மற்றும் HgO ஆகியவற்றின் சிதைவுறு வெப்பநிலைகள் _____
(a) 600 மற்றும் 700K (b) 700 மற்றும் 600K (c) 500 மற்றும் 600K (d) 600 மற்றும் 500K

16.Al_2O_3 யை விட குறைந்த நிலைத்தன்மை உடையது எது?
(a) Cr_2O_3 (b) CaO (c) MgO (d) இவற்றில் ஏதுமில்லை

17.E^o ஆனது நேர்குறி எனில், ΔG^o ஆனது _____
(a) நேர்குறி (b) எதிர்குறி (c) பூஜ்ஜியம் (d) பூஜ்ஜியத்தை விட அதிகம்

18.$Cu_{(s)} + 2Ag_{(aq)} \rightarrow Cu^{2+}_{(aq)} + 2Ag_{(s)}$ இவ்வினைப்படி எது அதிக வினைத்திறன் மிக்கது?
(a) Cu (b) Ag (c) (அ) மற்றும் (ஆ) (d) Ag^+ அயனி

19.ஹால்-ஹெராய்டு முறையில், கால்சியம் குளோரைடின் பயன் _____
(a) உருகுநிலையை அதிகரிக்கிறது (b) உருகுநிலையை குறைக்கிறது (c) வெப்பநிலையை சீராக வைக்கிறது (d) கொதிநிலையை அதிகரிக்கிறது

20.புலத் தூய்மையாக்கல் இதன் அடிப்படையிலானது ஆகும்.
(a) பின்ன காய்ச்சி வடித்தல் (b) எளிய காய்ச்சி வடித்தல் (c) பதங்கமாதல் (d) பின்ன படிகமாக்குதல்

21.கீழ்கண்டவற்றில் எந்த ஒன்று வான் ஆர்கல் முறையில் தூய்மை செய்யப்படுவதில்லை?
(a) சிர்கோனியம் (b) சிலிக்கன் (c) டைட்டேனியம் (d) (அ) மற்றும் (இ) இரண்டும்

22.உலோகங்களை "கால்வனைஸ்" செய்ய எந்த ஒன்று பயன்படுகிறது?
(a) இரும்பு (b) காப்பர் (c) துத்தநாகம் (d) அலுமினியம்

23. இவ்வெப்பநிலையில் CO அதிக நிலைப்புத் தன்மை உடையது _____
(a) குறைவெப்பநிலை (b) உயர் வெப்பநிலை (c) மிதமான வெப்பநிலை (d) 0°C

24.கீழ்கண்ட எந்த ஒடுக்கம் வெப்பவியக்கவியல் சாத்தியத்தன்மை உடையது?
(a) $Al_2O_3 + 2Cr \rightarrow Cr_2O_3 + 2Al$ (b) $2Al_2O_3 + 3Ti \rightarrow 3TiO_2 + 4Al$ (c) $Cr_2O_3 + 2Al \rightarrow Al_2O_3 + 2Cr$ (d) $6MgO + 4Al \rightarrow 2Al_2O_3 + 6Mg$

25.தங்க அணைவை தனிம தங்கமாக மாற்றும் செயல்முறை _____
(a) புடமிடுதல் (Cupellation) (b) தனிமநிலைக்கு ஒடுக்கி வீழ்படிவாதல் (cementation) (c) நீர்மமாக்கல் (d) அடர்பித்தல்

26.குறைகடத்திகளாக பயன்படும் சிலிகன், ஜெர்மானியம் போன்ற தனிமங்கள் _____ முறையில் தூய்மைப்படுத்தப்படுகின்றன.
(a) வெற்றிடத்தில் வெப்பப்படுத்துதல் (b) வான் - ஆர்கல் முறை (c) மண்டல சுத்திகரிப்பு (d) மின்னாற்பகுத்தல்

27.உலோகவியல் செயல் முறையில் முதல் படி நிலையானது,_____.
(a) வறுத்தல் (b) அடர்பித்தல் (c) கால்சினேற்றம் (காற்றில்லா சூழலில் வறுத்தல்) (d) (அ) மற்றும் (இ) இரண்டுமே

28.கீழ்க்கண்டவற்றுள் நுரை மிதப்பு முறையில் நுரைக்கும் காரணியாக செயல்படுகிறது ?
(a) பைன் எண்ணெய் (b) கிரசால் (c) NaCN (d) ஜான்தேட்

29.கீழ்க்கண்ட உலோகங்களில் சுய ஒடுக்கம் அடைவது எது?
(a) கலினா (b) HgS (c) ZnS (d) அ மற்றும் ஆ

30.உலோகங்களை அலுமினோ வெப்ப ஒடுக்க முறை மூலம் பிரித்தெடுப்பதில் எவ்வகையான உலோக ஆக்சைடுகளை பிரித்தெடுக்க பயன்படுகிறது

(a) உருக கூடிய ஆக்சைடுகள் (b) கார்பனால் ஒடுக்க முடியாதது (c) ஹைட்ரஜனால் ஒடுக்க முடியாதது (d) அதிக காரத்தன்மை கொண்டது

QB 365 Study Material
QUESTION BANK 365